## அறுபடைவீடு முருகன் திருக்கோயில்

# மேம்பாட்டு பணிகள் தொடர்பான சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 31 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (29.01.2025) ஆணையர் அலுவலகத்தில், அறுபடை வீடு முருகன் திருக்கோயில்களின் மேம்பாட்டு பணிகள், மகா சிவராத்திரி பெருவிழா மற்றும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களின் திருப்பணி குறித்த சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

இக்கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகன் திருக்கோயில்களுக்கு ஆகம விதிப்படி குடமுழுக்குகள் நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் மீண்டும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்துவதோடு, பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் மேம்படுத்தி வழங்கப்பட்டு வருகின்றன. பெருந்திட்ட வரைவின்கீழ் திருச்செந்தூரில் ரூ.400 கோடி மதிப்பீட்டிலும், பழனியில் ரூ.240 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி ரூ.183 கோடி மதிப்பீட்டிலும், மருதமலையில் ரூ.61 கோடி மதிப்பீட்டிலும், சிறுவாபுரியில் ரூ.16.50 கோடி மதிப்பீட்டிலும், குமார வயலூரில் ரூ.30 கோடி மதிப்பீட்டிலும், உதகமண்டலம்-காந்தலில் ரூ.16 கோடி மதிப்பீட்டிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருத்தணி திருக்கோயிலுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகை தருவதால், அத்திருக்கோயிலுக்கு ரூ.55 கோடி மதிப்பீட்டில் மாற்று மலைப்பாதை அமைப்பதற்கும், சிறுவாபுரி திருக்கோயிலுக்கு பக்தர்களின் நலன் கருதி போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மாற்று பாதை அமைக்கவும், பொதுப்பணித்துறையும், இந்து சமய அறநிலையத்துறையும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, மருதமலையில் 160 அடி உயரமுள்ள முருகன் சிலையை நிறுவிட உள்ளோம். உதகமண்டலம், காந்தலில் அமைந்துள்ள 40 அடி உயர முருகன் சிலையை புனரமைத்திட உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

**பெருமை சேர்க்கும் திராவிட மாடல் ஆட்சி!**

அறுபடைவீடு முருகன் திருக்கோயில்களுக்கு 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 1,622 மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்து செல்லப்பட்டுள்ளனர். மேலும், பிப்ரவரி மாதத்தில் 400 மூத்த குடிமக்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர். இந்த அரசு பொறுப்பேற்றபின், இது வரை 90 முருகன் திருக்கோயில்கள் உட்பட 2,400 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. வரும் பிப்ரவரி இரண்டாம் தேதி 67 திருக்கோயில்களுக்கும், மூன்றாம் தேதி நடைபெறும் 27 திருக்கோயில்களின் குடமுழுக்கோடு சேர்த்து 2,500 திருக்கோயில்களை தொடுகின்ற நிலையில் இந்து சமய அறநிலையத் துறை தன்னுடைய பயணத்தை மேற்கொண்டு இருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக அறுபடைவீடு முருகன் திருக்கோயில்களுக்கு ரூ.801.46 கோடி மதிப்பீட்டில் 275 பணிகளும், அறுபடைவீடு அல்லாத முருகன் திருக்கோயில்களுக்கு ரூ.284.17 கோடி மதிப்பீட்டில் 609 பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது.

**திருச்செந்தூர் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்!**

திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கடற்கரை பகுதியில் ஏற்பட்ட கடல் அரிப்பிற்கு நிரந்தர தீர்வினை ஏற்படுத்தும் வகையில் 5 நிறுவனங்களிடமிருந்து இறுதி அறிக்கை பெறப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கின்றது. அப்பணியினை மீன்வளத்துறை அல்லது இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் மேற்கொள்வதா என்பதனை முடிவெடுத்து, இன்னும் இரண்டு நாட்களின் அப்பணிக்கான டெண்டர் கோரப்படும். திருச்செந்தூர் கடற்கரை பகுதியில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சாய்வு தளத்தில் மணல் துகள்கள் சேர்ந்து இடையூறு ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் முருக பக்தர்களும், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான இறையன்பர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் 1,003 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, முருகனின் பெருமைகளை விளக்கிடும் காட்சியமைப்புகள், அறுபடை வீடு மெய்நிகர் காட்சியரங்கம், முப்பரிமாண திரையரங்கம் உள்ளிட்ட அனைத்து அம்சங்களோடு அமைந்து இரண்டு நாட்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பார்வையிட்டனர். இந்த மாநாட்டினை ஒட்டுமொத்த ஒன்றியத்தையும் திரும்பி பார்க்கும் வகையில் நடத்தி காட்டிய பெருமை இந்த திராவிட மாடல் அரசுக்கே உண்டு.

**திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை!**

திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலை குறித்து 1930 ஆம் ஆண்டிலே இலண்டன் பிரிவீயு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. அதை தொடர்ந்து, பல்வேறு காலகட்டங்களில் ஐந்து வழக்குகளில் உயர்நீதிமன்றம் தீர்ப்புகளை வழங்கி இருக்கின்றது. தற்போது கூட இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை இரண்டு பேர் கொண்ட நீதிமன்ற அமர்வு வருகின்ற பிப்ரவரி 4-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கிறது. அரசினுடைய நிலைப்பாட்டைப் பொறுத்த அளவில் எல்லோருக்கும் எல்லாம், அவரவர் விரும்புகின்ற இதை சடங்குகளை முன்னோர்கள் எப்படி அதை பின்பற்றி வந்தார்களோ அதே நிலை தொடர்ந்தால் அனைவருக்கும் அமைதியான ஒரு சூழல் அமையும். இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எந்த மதமாக இருந்தாலும் அவருடைய வழிபாட்டிற்கு முழு பாதுகாப்பும், அவர்களின் வழிபாட்டு நெறிமுறையில் முழு அமைதியும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றது.

இது குறித்து நேற்றைய முன்தினம் நான் அளித்த பேட்டியின் போது இதை பொது பிரச்சினையாக ஆக்கி விடாதீர்கள் என்றும், சாதி, மதம், இனங்களுக்கு அப்பாற்பட்டு அனைவரும் மனிதர்கள் என்ற நிலையிலே இந்த பிரச்சனையை அணுக வேண்டுமென்றும் பத்திரிகையாளர்களும், ஊடகவியலாளர்களும் இதை யாருக்கும் சாதகமான ஒரு சூழலில் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன். முதலமைச்சர் அவர்களை பொறுத்த அளவில் எல்லோருக்கும் எல்லாம் என்று ஆட்சி நடத்துபவர். உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் இது குறித்து மேலும் விவரமாக சொல்வது சரியானதாக இருக்காது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

**மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

அனைத்து துறைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வளர்ச்சியை நோக்கி தமிழகத்தை கொண்டு செல்லும் வகையில் முதலமைச்சர் செயலாற்றி வருகிறார். இந்து சமய அறநிலையத்துறையை பொறுத்தளவில் 2,500 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, பிறருக்கு முன் உதாரணமாகவும், துறையில் இதுவரை நடத்திடாத வகையில் பழனி முத்தமிழ் முருகன் மாநாட்டினை சீரும் சிறப்புமாக நடத்தி காட்டிய பெருமை நமது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை சேரும். ஒரே நேரத்தில் அறுபடைவீடு முருகனை கட்டணமில்லாமல் தரிசிக்கும் வாய்ப்பினை மூத்த குடிமக்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

எந்த ஒரு நாடு உள்கட்டமைப்பில் கவனம் செலுத்துகிறதோ அது வளர்ச்சியை நோக்கி சென்று மேன்மையடையும். அந்த வகையில் 7 முருகன் திருக்கோயில்களுக்கு பெருந்திட்ட வரைவின் மூலம் ரூ.872 கோடிக்கு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். துறை சார்ந்த எந்த பிரச்சனையையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றால் உடனடியாக அதற்கான தீர்வினை எடுக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சிக்கு மகுடம் சூட்டுவதாக இந்து சமய அறநிலையத்துறை செயல்பட்டு வருகிறது. துறை பதிப்பகப்பிரிவின் மூலம் 216 அரிய நூல்கள் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதோடு விரைவில் மேலும், 300 நூல்களை பதிப்பிக்கும் வகையில் பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. அதே போல துறையின் முக்கிய நிகழ்வுகளிலும் ஆதீனங்களை அழைத்து பெருமை சேர்க்கிறார்கள். இந்த ஆட்சியானது உலகம் முழுவதும் பேசக்கூடிய வகையில் சிறப்பாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

**சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

முதல் வீடாக போற்றப்படும் திருப்பரங்குன்றமானது திருமுருகாற்றுப் படையில் நக்கீரரால் பாடப்பெற்ற தலமாகும். அங்கு காலங்காலமாக எப்படி நடைமுறையில் இருக்கிறதோ அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் அனைவருடைய எண்ணமாக இருக்கிறது. குறிப்பாக நீதிமன்றம் காட்டுகின்ற வழியில் அவரவர் சமயங்களை அவரவர் வழிபடுவதற்கான நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும் என்பது அமைச்சர் அவர்களின் எண்ணமாகும். ஒரு அமைதியான சூழ்நிலையில் அதனை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது எல்லா ஆதீனங்களின் எண்ணங்களாக இருக்கிறது. கொங்கு நாட்டில் அமைந்துள்ள மருதமலையில் 160 அடி உயர முருகன் சிலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலோடு, இந்து சமய அறநிலையத்துறையில் எண்ணிலடங்கா திருப்பணிகள் நடைபெற்று வருவதோடு, சமய இலக்கிய புத்துணர்ச்சியை ஊட்டும் வகையில் பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு அனைவராலும் பாராட்டும் விதமாக நடத்தப்பட்டது. அதிகளவில் முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ள தோடு, மருதமலை ஆண்டவனுக்கு மிக உயரமான சிலை அமைக்கப்படுவதை வரவேற்று பாராட்டுகிறோம். இந்த பணிகள் தொடரட்டும், எல்லா விதத்திலும் நல்லிணக்கத்தோடு சமய உலகம் பயணிக்கட்டும் என்று தெரிவித்தார்.

**பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

இந்து சமய அறநிலையத்துறையானது உலகளவில் பேசக்கூடிய வகையில் சிறப்பாக பணியாற்றி வருகிறது. குறிப்பாக முத்தமிழ் முருகன் மாநாட்டினை உலகமெங்கும் தமிழர்கள் போற்றி பாராட்டுகின்றனர். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையை சிறப்பாக வழிநடத்துகின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், உயர் அலுவலர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம். எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் நாமும் இடையில் சமூக விரோத சக்திகளுக்கு வாய்ப்பு கொடுக்காமல் எல்லோரும் ஒற்றுமையாக, சகோதரர்களாக இருந்து செயல்படக்கூடிய வகையில் இந்த நல்ல செய்தியை கொண்டு சேர்க்க வேண்டும். நமக்குள்ளே சிறிய அளவில் பூசல்கள் ஏற்படுகின்ற போது அதை நாம் தீர்த்துக்கொள்ள கூடிய வகையில் நல்ல நெறியை நோக்கி நாம் போக வேண்டுமேயொழிய, மக்களிடத்திலே மனதை திசை திருப்பக்கூடிய வகையில் நம்முடைய செயல்பாடுகள் இருக்க கூடாது என்பதனை அமைச்சர் வலியுறுத்தினார்கள்.

பழனி, திருச்செந்தூர் போன்ற திருக்கோயில்களுக்கு மிகப்பெரிய அளவில் திருப்பணியை மேற்கொண்டு வருகிறார்கள். இது அனைத்தும் பக்தர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். 2,500க்கும் மேற்பட்ட கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளதோடு, 10,000-க்கும் மேற்பட்ட கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்கு தலா ரூ.2.50 இலட்சம் வழங்கி திருப்பணி மேற்கொள்ள உதவி புரிந்தமைக்கும், மருதமலையில் மிக உயரமான முருகன் சிலை அமைக்கப்படுவதற்கும் எங்களது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் சுகிசிவம், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், திருமதி தேச மங்கையர்க்கரசி, அறுபடைவீடு திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பாரத சாரண, சாரணியர் இயக்க வைரவிழா ஜாம்புரி தேசிய திரளணி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி இரண்டாம் நாள் நிகழ்வில் நேற்று காலை கலந்துகொண்டுள்ள சாரணர்கள் 24க்கும் மேற்பட்ட சாகசப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். Planks Bridge, Monkey Bridge, Beam Climbing, Tyre Tunnel, Fire Ditch, Gun Shooting, Ring Throw போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டனர். இதற்காக 72 தளங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தீரத்துடன் இப்பயிற்சிகளில் பங்கேற்றுள்ள மாணவச் செல்வங்களைச் சந்தித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாழ்த்துகளைத் தெரிவித்து அவரும் பயிற்சியில் ஈடுபட்டார். இது சாரண சாரணியர் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் சாரண சாரணியர் மற்றும் அலுவலர்களிடையே மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியது.

## பேராவூரணி ஒன்றியத்தில்

# 6 இடங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள்!

## அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்!

பேராவூரணி ஜன. 31 - தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஆறு ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் தொடங்கி வைத்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஒட்டக்காடு ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் மற்றும் நடுமனைக்காடு அரசு நிகழ்ச்சி. கல்லூரணிக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில், பாரதி நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, செருவாவிடுதி ஊராட்சியில் மேல ஆதிதிராவிடர் குடியிருப்பு, இடையாத்தி ஊராட்சியில் கொடிமரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருவோணம் ஒன்றியம் வெட்டுவாக்கோட்டை ஊராட்சியில் தட்டாங்கொல்லை ஆதிதிராவிடர் குடியிருப்பு ஆகிய 6 இடங்களில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் நேற்று முன்தினம் (29.01.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தலைமை வசித்தார். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை , பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் என். மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 ஊராட்சிகளில் நடைபெறுகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். புதுமை பெண் திட்டம். தமிழ்ப் புதல்வன் திட்டம். விடியல் பயணம். காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம். , தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) சங்க மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர்

# மாம்பலம் ஆ.சந்திரசேகர் இல்லத் திருமணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜன. 31- சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் - ச.மாலா ஆகியோரின் மகன்வழி பேரனும் ஆ.ச.இராசேந்திரன் - இரா. இராதிகா ஆகியோரின் புதல்வருமான இரா.இராசராசசோழனுக்கும், சென்னை இராயப்பேட்டை இ.கோபிநாத் - ஜி.யோகலட்சுமி ஆகியோரின் புதல்வி கோ.அனு அமிர்தாவுக்கும் மணவிழா இன்று (31.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் மயிலாப்பூர் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் ஏ.வி.எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இம்மணவிழாவை கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.ஏழுமலை, 'நந்தனம்' கி.மதி, மயிலை எஸ். முரளி, கோ.சு.மணி, எம். ஆறுமுகம், ராஜா அன்பழகன், மோனிஷா கருணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

அமைச்சர்கள் எ.வ. வேலு, மா.சுப்பிர மணியன், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி. செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, பூச்சி முருகன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.

## மணப்பாறை அருகே

# சாரண - சாரணியருக்கு வழங்கப்படும் உணவை சாப்பிட்டு பார்த்து ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பல்வேறு மாநில உணவை சாப்பிட்டு குறைகளை கேட்டறிந்தார்!

திருச்சி, ஜன. 31 - திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் பாரத சாரண - சாரணியர் இயக்க வைர விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடங்கியது. இந்த சாரண - சாரணியர் இயக்க மாணவ - மாணவிகள் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் என சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் 7 நாட்கள் அதே பகுதியில் தங்குகின்றனர். இதில் சாரண சாரணிய இயக்கத்தை சேர்ந்தவர்களின் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இதற்காக தமிழகம் மட்டுமல்லாது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் மாணவ- மாணவிகள் வந்துள்ளனர். அவர்களுக்காக அந்த மாநிலத்திற்கு தகுந்த உணவுகள், அவரவர் விருப்பம் போல் வழங்கப்பட்டு வருகின்றது. இதையடுத்து நேற்று காலை தமிழ்நாடு பாரத சாரண - சாரணியர் இயக்க தலைவரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யமொழி நிகழ்ச்சி நடைபெறும் பகுதிக்கு வருகை தந்தார். அப்போது ஒவ்வொரு மாநில உணவு தயாரிக்கும் பகுதிக்கு சென்று உணவு சுத்தமான, சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகின்றதா என்பதை இஞ்ச் முதல் இஞ்சாக ஆய்வு செய்தார். உணவில் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரத்தையும் பார்வையிட்டார். அதன் பின்பு பணியாளர்கள் உள்ளிட்டோர் சாப்பிடும் இடத்திற்கு சென்று அங்கு முதலில் மாணவ- மாணவிகள் சேர்ந்து பொங்கல் சாப்பிட்டார். தொடர்ந்து பல்வேறு மாநிலத்தை சேர்ந்த சாரண - சாரணியர் உள்ள பகுதிக்கு சென்று அங்கு உள்ள உணவையும் சாப்பிட்டு பார்த்த பின் உணவின் சுவை மற்றும் தரம் குறித்து அந்த மாணவ - மாணவிகள் மற்றும் பொறுப்பாளர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டார். மேலும் குறை ஏதேனும் இருந்தாலோ என்ன தேவை என்றாலோ 24 மணி நேரமும் அதற்கான பொறுப்பாளர்கள் இருப்பார்கள் அவர்களிடம் சொன்னால் உடனே நிவர்த்தி செய்யப்படும் என்றும் கூறினார். இதுமட்டுமின்றி தமிழக முதல்வர் இந்த நிகழ்வை தொடர்ந்து கண்காணித்து வருகிறார் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் சாப்பிடுவதில் தொடங்கி எங்கு சென்றாலும் எல்லா மாநில சாரண - சாரணியர் இயக்கத்தை சேர்ந்த மாணவ - மாணவிகள் பொறுப்பாளர்கள், தூய்மைப்பணியாளர் என அனைவரும் ஒன்று சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அனைவரிடமும் அன்பு காட்டி, அக்கறையுடன் பேசிய அமைச்சர் சிறுமி ஒருவரை தன் அருகில் நிறுத்தி புகைப்படம் எடுத்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து அங்குள்ள வளாகத்தில் ஒவ்வொரு மாநிலத்தை சேர்ந்தவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் கேரள மாநில மாணவ - மாணவிகள் பேண்டு வாத்தியம் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

காலையில் தொடங்கி இரவு வரை 7 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ள நிலையில் 3 ம் தேதியுடன் இந்த விழா நிறைவு பெறுகின்றது.

### 56வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

# புதுக்கோட்டையில் அமைதி ஊர்வலம் - அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, ஜன. 31 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி தந்த காவியத் தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்க்கு அறிமுகம் செய்து வைத்த



ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

வருகின்ற 3.2. 2025 திங்கள்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, கிளைக் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயல் வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.